**MCOP NO: 496/2020** **DATE: 05.11.2025**

ம.சா :1

பெயர் : திரு. சக்திவேல்

த/பெ : திரு. முத்துசாமி

வயது : 66

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:</u>**

**<u>முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

03.08.2016 அன்று இரவு 7 மணிக்கு செட்டிநாடு மருத்துவமனை பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள டீக்கடைக்கு அருகே இந்த விபத்து ஏற்பட்டதாக சொல்லி உள்ளேன். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் இருந்து புறப்படும்போது பின்னால் வந்த வாகனமானது என் மீது மோதியதால் நான் கீழே விழுந்து விட்டேன். என் மீது மோதிய வாகனம் நிற்காமல் சென்று விட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் நான் செட்டிநாடு மருத்துவமனை சென்று முதல் உதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு நான் என்னுடைய வீட்டிற்கு சென்று விட்டேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிராயப்பு காயங்கள் என்றால் சரியல்ல. எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. நான் எலும்பு முறிவு சிகிச்சை பெற்றது வேறொரு மருத்துவமனை ஆகும், ஆனால் அந்த மருத்துவமனையின் பெயர் நியாபகம் இல்லை. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து குறித்து புகார் நான் கொடுக்கவில்லை. எனது மனைவி புகார் கொடுத்தார். அவர் எனக்கு ஏற்பட்ட விபத்தை பார்க்கவில்லை. புகார் 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் நான் முதலில் புகார் கொடுத்தேன், அந்த புகாரை போலீசார் பதிவு செய்யவில்லை என்பதால் 6 நாட்கள் கழித்து எனது மனைவி புகார் கொடுத்தார், அதன் அடிப்படையில் தான் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது மனுவில் சொல்லப்பட்டுள்ள காலம் எண் 16(A)-ல் உள்ள விவரங்களை நான் தான் எனது வழக்கறிஞருக்கு தெரிய படுத்தினேன். தற்போதும் அந்த வாகனத்தை ஓட்டிய நபர் யார் மற்றும் அவரின் விலாசம் என்பது பற்றியும் எனக்கு தெரியாது. எனது வாகனத்திற்கு உரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. என் மீது மோதிய வாகனத்தை போலீசார் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கைக்கு உட்படுத்தினாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் போலீசாரை விசாரித்தபோது அந்த வாகனம் கிடைக்கவில்லை என்று எனக்கு சொன்னார்கள். இந்த விபத்து சம்பந்தப்பட்ட

குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை. நான் எனது மனுவில் என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டிய நபரின் பெயர் மற்றும் விலாசம், மேலும் அவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை நான் தான் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கில் நான் அவ்வாறு நிரூபிக்கப்படாததால் முதல் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில், வருமானம் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்பதால் முதல் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை 2-ம் எதிர்மனுதாரர் தனது விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.